REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 212

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு (இலங்கை உட்பட) | |
| ஆண்டு | ரூ. 24—0—0 |
| 6 மாதம் | ரூ. 12—0—0 |
| 3 மாதம் | ரூ. 6—0—0 |
| வெளிநாடு: | |
| ஆண்டு | ரூ. 30—0—0 |
| 6 மாதம் | ரூ. 15—0—0 |
| 3 மாதம் | ரூ. 7—8—0 |

"THE NAM NADU" A TAMIL DAILY! THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மாசி 6உ புதன் (17—2—54) ★ ★ ★ வெளியீடு: மாசி 7உ வியாழன் (18—2—54)

# ஆசிரியர் கிளர்ச்சி—ராணுவ குறுக்கீடு

—(:)—

## 3 பேர் பலி! 60 பேருக்கு படுகாயம்!

## சர்க்கார் பஸ்கள் தீக்கிரையாயின!

## டிராம்களுக்கும் அதே கதி!

—o—

### கல்கத்தா நகர் முழுதும் தடை சட்டம்

—o—

### மின்சார கம்பிகள் நறுக்கப்பட்டதால் நகரை இருள் சூழ்ந்தது

கல்கத்தா, பிப். 16—

அறப்போர் செய்த ஆசிரியர்களில் 50 ஆசிரியைகள் உட்பட 300 ஆசிரியர்களை போலீசார் கைது செய்ததைத் தொடர்ந்து, கல்கத்தா நகரின் பல பகுதிகளில் இன்று கலகம் மூண்டது. மூன்று இடங்களில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; மூவர் இறந்தனர்; 60 பேருக்கு அதிகமாகப் படுகாயமடைந்துள்ளனர் என்று நம்பப்படுகிறது.

சில பகுதிகளில் மட்டுமே போடப்பட்டிருந்த 144 தடைச் சட்டம், கல்கத்தா முழுதிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டு இருக்கிறது.

போலீசுக்குத் துணை செய்வதற்காக இராணுவமும் அழைக்கப்பட்டு இருக்கிறது.

அரசாங்க பஸ்களும், டிராம் வண்டிகளும் ஒரு சில பகுதிகளில் கொளுத்தப்பட்டன; அதனால் பஸ், டிராம் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டது.

ஆசிரியர்களைக் கைது செய்ததைக் கண்டித்து, மேற்கு வங்க சட்டசபையை நோக்கிச் சென்ற 20 ஆயிரம் பேர் கொண்ட மக்கள் திரளைப் போலீசார் தடுத்து நிறுத்தி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர்—துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தினர்,

யு. எஸ். ஐ. எஸ். நூல் நிலையம் உள்ள கட்டிடத்திற்குச் சேதம் விளைவிக்கப்பட்டு இருக்கிறது; அரசாங்கப் படிப்பகங்கள் தாக்கப்பட்டன; மின்சாரக் கம்பிகள் துண்டிக்கப்பட்டு நகரின் ஒரு பகுதி இருளில் மூழ்கியது.

ஊர்வலத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்; பிரஜா—சோஷலிஸ்டு கட்சித் தலைவர் சுரேஷ் பானர்ஜி கைது செய்யப்பட்டார்; அதன் பிறகு, குதிரைப்பட்டாளம் மக்களைத் துரத்தி அடித்தது. கல் வீச்சால் தீயணைக்கும் எஞ்சின்களும் நாசமாயின.

மூன்று எம். எல். ஏ.-க்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். பொதுவுடமைக் கட்சித் தலைவர் ஜோதி பாசுவின் வீட்டிலும், மற்றும் சில இடதுசாரித் தலைவர்கள் இல்லங்களிலும் போலீசார் சோதனை போட்டனர்.

ஆசிரியர்கள் மீது கண்ணீர்ப் புகையைப் பிரயோகித்ததைக் கண்டித்து, அசெம்பிளி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்.

மேல் வங்க ஆசிரியர்கள் அறப்போர் பற்றி புதுடில்லி ராஜாங்க சபையில் கேட்கப்பட்டது. அது, மாநில சர்க்கார் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் பதிலளித்தார்.

தற்போது அறப்போர் தொடுத்திருக்கும் ஆசிரியர்களுக்கும், சர்க்கார் உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் ரூ. 17—8—0 வீதம் பஞ்சப்படி தருவதாகவும், உதவி பெறாத பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ 10—0—0 வீதம் தருவதாகவும் பிரதமர் ராய் அறிவித்துள்ளார்.

மேலும், ஆசிரியர்கள் குறைகளை விசாரித்து சிறந்த முடிவு காண ஒரு விசாரணைக் குழுவை நியமிப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

### இங்காங் 'முடிவு!'

நாகபுரி, பிப். 16—

ஹங்கேரி மல்யுத்த வீரர் இங்காங் தனது 25 ஆண்டு மல்யுத்தத் தொழிலிலிருந்து 1954 ஏப்ரல் மாதத்தில் விலகி, ஓய்வெடுத்துக் கொள்வார். இங்காங்கினுடைய வயது 43; எடை 376 பவுண்டுகள்.

### ரஷியாவின் படைபலம்!

லண்டன், பிப் 16—

ரஷ்யாவின் படை பலம் 475 லட்சமாகவும், கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்டு நாடுகளின் படைபலம் 119 லட்சமாகவும் பெருகியிருப்பதாக பிரிட்டிஷ் சர்க்கார் காமன்ஸ் சபையில் தெரிவித்தது.

### 'சுதந்திர மனிதன்'—கபார்கான்?

கராச்சி, பிப். 16—

கான் அப்துல் கபார்கான் நடமாட்டம் மீதுள்ள எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்குமாறு பாகிஸ்தான் பிரதமர் உத்தரவிட்டுள்ளாராம். பார்வையாளர்கள், கடிதப் போக்குவரத்து மீதுள்ள தடைகளும் நீக்கப்பட்டுள்ளதாக மகம்மது அலி கூறினாராம்.

கபார்கான் பாகிஸ்தானுக்குள் சுதந்திரமாக நடமாட முடியாதென்றும், இன்னும் காவல் கைதியே என்றும் தகவலறிந்த வட்டாரத்தினர் கூறுகின்றனர்.

## சட்டசபையில் கவர்னர் பேச முடியாமல் திணறினார்

— (:) —

### பன்னிரண்டு நிமிடங்கள் இந்த நிலை நீடித்தது

கல்கத்தா, பிப். 16—

நேற்று முன் தினம் மேற்கு வங்க சட்டசபையைத் துவக்கி வைத்துப் பேச வந்த கவர்னர், 12 நிமிடங்கள் வரையில் பேச முடியாமல் திணறிப் போனார். சட்டசபை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கவர்னரைப் பேசவிடாமல் தடுத்துவிட்டனர்.

கவர்னர் சபையில் தனது உரையை ஆற்ற எழுந்த உடனே, கவர்னர் மாளிகை முன் மறியல் செய்த ஆசிரியர்களை அழைத்து அவர்கள் குறைகளைக் கேட்க கவர்னர் முன்வராததற்கு என்ன காரணம் என்ற கேள்வியை சபையில் எதிர்க் கட்சித் தலைவர் எழுந்து கேட்டார்.

உடனே சபையில் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டு 'ஆசிரியர் குறைகள் கவனிக்கப்பட வேண்டும்' என்று எதிர்முகாமிலிருந்தும் 'உட்கார்' என்று காங்கிரஸ் முகாமிலிருந்தும், 'ஒழுங்கு ஒழுங்கு' என்று அவைத் தலைவரிடமிருந்தும் முழக்கங்கள் கிளம்பின. இந்தச் சூழ்நிலையில் கவர்னர் தமது பேச்சைப் படிக்க எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றிபெறவில்லை.

பன்னிரண்டு நிமிடங்களுக்குப் பிறகு எதிர் கட்சியினர் சபையை விட்டு வெளியேறி வெளியில் இருந்த ஆசிரியர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

கடந்த 100 மணி நேரமாக இடைவிடாது ஆசிரியர்கள் சர்க்கார் காரியாலயத்தின் முன் மறியல் செய்து வருகின்றனர்.

## மதுக்குடியில் பங்கீடு முறை தேவையாம்!

### ராமமூர்த்தி விசாரணை குழுவின் முடிவு

சென்னை, பிப். 16—

"மதுவிலக்கு வெற்றி பெறவில்லை; ஆகவே அதை மாற்ற வேண்டும்; சாராயம், கள் இரண்டும் சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு பகிரங்கமாக விற்க அனுமதிக்க வேண்டும்,"

—என்று சர். எஸ். வி. ராமமூர்த்தி தலைமையில் நியமிக்கப்பட்ட ஆந்திர மதுவிலக்கு விசாரணைக் கமிட்டி ஏகமனதாக தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

"மதுவிலக்கு என்பது, ஒருவர் எவ்வளவு சாப்பிடலாம் அல்லது எந்தெந்த நேரங்களில் அதை விற்கலாம் என்பதைக் கட்டுப்படுத்துவதாகத்தான் இருக்க வேண்டும்,"

—என்று கமிட்டி கருதுகிறது.

"மதுவகைகள் விற்பனை பூராவும் சர்க்கார் நிர்வாகத்தில் இருக்க வேண்டும்; மதுவகைகள் பங்கீடு செய்யப்பட வேண்டும்,"

—என்று கமிட்டி சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது.

"வெளிநாட்டு மதுவகைகள் மீதுள்ள தடை நீடிக்க வேண்டுமென்றும், ஆனால் சுலபமாக 'பர்மிட்' கிடைக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்,"

—என்றும் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறதாம்!

### ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம்

—:—

ஜி. டி. நாயுடு கருத்து

காரைக்குடி, பிப். 16—

ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம் பற்றி தோழர் ஜி. டி. நாயுடு இங்கு பேசுகையில், "பன்னிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகட்கு தொழிற் கல்வி போதிக்கக்கூடாது — அரைப் பகலில்லை என்றும், கிராமங்களில் இத்திட்டத்தை அமுல் நடத்துவதால் பயனில்லையென்றும், நகரங்களில் தொழில் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ஓரளவுக்கு மாணவர்களுக்கு தொழிற்கல்வி போதிக்கலா"மென்றும் கூறினார்.

### தஞ்சையில் 80,000 டன் அரிசி கொள்முதல்

பற்றுக்குறை பிரதேசங்களுக்கு அனுப்ப உத்திரவு

சென்னை, பிப். 16—

சென்னை சர்க்கார் தஞ்சை மாவட்டத்திலிருந்து அரிசியாக 80,000 டன் அரிசி கொள்முதல் செய்து பற்றுக்குறை மாவட்டங்களுக்கு அனுப்புமாறு உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

### மேல் சபைகள் ரத்து?

1956-ல் பரிசீலனையாம்!

புதுடில்லி, பிப். 16—

1956-ல் எல்லா மாநிலங்களிலும், மேல்சபைகளை ரத்து செய்வதுபற்றி இந்திய சர்க்கார் பரிசீலனை செய்யும் என்று இந்திய மேல்சபையில் உள்நாட்டு மந்திரி கட்ஜூ தெரிவித்தார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## திராவிட முன்னேற்றக் கழக சட்ட திட்ட திருத்தம்

★

திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட திட்ட விதிகளில் மாற்றமோ, திருத்தமோ, சேர்ப்போ செய்ய நினைக்கும் பொதுக் குழு உறுப்பினர்கள், அவற்றைத் தீர்மான வடிவில் எழுதி 28-2-54-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்துக்கு வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

"அறிவகம்," சென்னை, 10—2—54.

சி. என். அண்ணாதுரை,
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
கழகத்தின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 17—2—54 புதன்

# வெண்ணெயும் சுண்ணாம்பும்!

கனம் ஆச்சாரியார் கல்வித் திட்டத்தில் கூறப்பட்டுள்ள குறைந்த கால கல்வி போதனையின் விளைவாக, சிறுவர்கள் பெறும் கல்வியின் தரம் பாதிக்கதிகமாகக் குறைந்துவிடும் என்று கல்வித் துறையினர் கருத்தறிவித்தனர். பள்ளிக்கு வெளியில் சிறுவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் தொழில் பயிற்சி, சிறுவர்களை ஒன்றுக்கும் உதவாதவர்களாகக் குட்டிச் சுவராக்கிவிடும் நிலையில் உள்ளது என்று சிறுவர் கல்வியில் பழக்கமுடைய அனைவரும் ஒருமிக்கக் கூறினர். உருப்படாத புதிய திட்டத்திற்கு எதிர்ப்பு பலமாக வளர்ந்து கொண்டே வந்தது. ஆதரிக்கிறவர்கள் தொகையும் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் சிறுத்து விட்டது.

தொடக்கக் கல்வியை மாற்றியமைக்க வேண்டுமா அல்லது எப்பொழுதும்போலவே இருந்து வரலாமா, மாற்றுவதானால் எந்த வகையில் மாற்றி அமைக்க வேண்டும், இரண்டு வேளை கல்வி போதனையை ஒரு வேளை போதனையாகக் குறைக்காமல் அதிகமான சிறுவர்களுக்கு எப்படி கல்வியளிப்பது—என்பன போன்ற விவகாரங்களில் எல்லாம் முடிவு காண்பதற்கும், பரிகாரம் தேடுவதற்கும், ஒரு புதிய திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு முன்னரே, கல்வி நிபுணர்களின் ஒத்துழைப்பை நாடுவதுதான், ஒரு சர்க்காரின் நீங்காக் கடமையாகும். இந்தக் கடமை எல்லோருக்கும் பொதுவானதாகும்.

ஒரு அமைச்சர் குழுவில் உள்ள முதல் அமைச்சர், குறிப்பிட்ட கல்வித் துறையில், சொந்தத்தில் எவ்வளவு பெரிய நிபுணராக இருந்தபோதிலும், மேற்கூறிய பொது விதிக்குக் கட்டுப்பட்டு நடக்க முன்வருவதுதான் மக்களாட்சி முறைப்படி பொருத்தமுடையதாகவும் இருக்க முடியும் அப்படி நிபுணர்களின் கருத்தறிந்து உருவாக்கப்படும் திட்டமும் உயர்ந்ததாக இருக்கும் என்பதும் ஒப்புக்கொள்ளக் கூடியதுமாகும்.

ஆனால், கனம் ஆச்சாரியாரோ, எந்தக் கல்வி நிபுணர்களையும் கேட்டறிந்து தமது புதிய கல்வித் திட்டத்தைப் புகுத்தவில்லை; தமது அமைச்சர் குழுவிடமும் கலக்கவில்லை; சொந்தக் கட்சி சட்டசபை உறுப்பினரையும் கேட்கவில்லை. இந்த இன்றியமையாத சாதாரண பொறுப்பைக்கூட பொருட்படுத்தாது நடந்துகொண்ட ஒருவரிடம், அவர் நிபுணர்களைக் கலந்துகொண்டு செயலாற்ற இறங்குவார் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? எவரையும் கேட்காமல், எதேச்சாதிகாரப் போக்கிலேயே புதிய திட்டத்தைத் தமது பேனா முனையால் புகுத்தி விட்டார் கனம் ஆச்சாரியார். எதிர்பாராத இடங்களில் இருந்தெல்லாம் எதிர்ப்பு கிளம்பவே, கிளம்பின எதிர்ப்பும் தம்மைப் பதவியிலிருந்தே அடியோடு விரட்டிவிடும் பலம் கொண்டதாக மாறிவிடவே கனம் ஆச்சாரியாருக்குத் தன்னுணர்வு உண்டாயிற்று. அப்படியும் உறுதியாகக் கூறுவதற்கில்லை. திடீர் என்று தன்னுணர்வு ஏற்பட்டவர் போன்று செயலாற்ற முன்வந்தார் என்று கொள்வதுதான் நியாயமானதாகும்.

புதிய திட்டம் பற்றி ஆராய்ந்து கூறுவதற்காக ஒரு நிபுணர் குழுவை நியமித்தார். தமது அவசரக் கல்வித் திட்டத்தின் தராதரத்தை அறிந்துகொள்வதில் உண்மையிலேயே கனம் ஆச்சாரியாருக்கு நல்லெண்ணம் இருக்குமானால், நாட்டு மக்களின் மனோவளம் நன்கு தெரிந்தவர்களையும், நாட்டுக் குடிகளாகவும் உள்ள கல்வி நிபுணர்களைக் கொண்ட நிபுணர் குழுவை உருவாக்க அவர் முன் வந்திருப்பார்.

ஆனால், ஆச்சாரியார் அச்சிறந்த வழியைப் பின்பற்றவில்லை. தமது திட்டத்தை உயர்ந்தது என்று கூறுகின்றவர்களாகப் பார்த்து நிபுணர் குழுவை உருவாக்கினார். அந்தக் குழுவினர்களும் ஆச்சாரியார் உதவாக்கரை திட்டத்திற்கு ஒத்து ஊதிவிட்டனர்.

ஆச்சாரியார் நியமித்த நிபுணர் குழுவின் தலைவரான பாருலேகர், குழந்தைகளுக்கு ஒரு வேளை கல்வியே போதுமென்கிற மகா புத்திசாலி. மற்ற இருவரோ, நாட்டு வளம் தெரியாத நல்லவர்கள். எனவே, நிபுணர் குழு முடிவு, ஆச்சாரியாரின் ஒரு வேளை கல்வி ஏற்பாட்டை ஒப்புக்கொள்வதாக இருப்பதில ஆச்சரியமொன்றுமில்லை. ஆச்சாரியார் உள்ளம் பூரிப்படைவதிலும் புதுமை கிடையாது!

ஆந்திர மாநிலத்திலும், புதிய கல்வித் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. அங்கும் திட்டத்திற்குக் கணிசமான எதிர்ப்பு இருக்கிறது. அங்கு இப்பொழுதுள்ள அமைச்சர் குழுவில் உள்ள முதல் அமைச்சரும், நிதி அமைச்சரும் கல்வித் திட்டத்தை எதிர்த்து சென்னை சட்டசபையில் வாக்களித்தவர்களேயாவர்.

ஆந்திர மாநில சர்க்காரும திட்டத்தை ஆராய்ந்து முடிவுகூற ஒரு நிபுணர் குழுவை நியமித்து இருக்கிறது. கனம் ஆச்சாரியார் செய்து காட்டியதுபோல் திட்டத்தை ஆதரிப்பவர்களாகப் பார்த்து நிபுணர் குழு உறுப்பினர்களாக நியமிக்க முன்வரவில்லை; அல்லது நாட்டு மக்களைச் சேர்ந்தவர்களாக இல்லாதவர்களாகப் பார்த்து வேண்டுமென்றே உறுப்பினர்களாகப் பொறுக்கி எடுக்கப்படவில்லை. அல்லது நாட்டு மொழி தெரியாதவர்களாகவும் பார்த்து நிபுணர் குழுவில் சேர்க்கவில்லை.

நாட்டு மொழி கற்றவர்கள், நாட்டில் பிறந்தவர்கள், நடுநிலையில் உள்ள நிபுணர்களாகப் பார்த்து, புதிய கல்வித் திட்டத்தை ஆராய்ந்து அறிய, நிபுணர் குழுவை ஆந்திர மாநில சர்க்கார் அமைத்திருக்கிறது.

ஆந்திர நிபுணர் குழுவில் ஒரு சிறப்பான அம்சமும் இருக்கிறது. அதாவது, பொதுமக்கள் பிரதிநிதிகளான ஐந்து சட்டசபை உறுப்பினர்களும் நிபுணர் குழுவில் உள்ளனர். அதுவுமல்லாமல், சர்க்கார் ஊழியர்களாக இல்லாத கல்வித் துறையினரும் அதில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

சென்னை சர்க்காரின் நிபுணர் குழு மூன்று உறுப்பினர்களை மட்டுமே கொண்டதாக இருக்க, ஆந்திர சர்க்கார் நிபுணர் குழு 12 உறுப்பினர்களைக் கொண்டதாகவும் இருக்கிறது.

நிபுணர் குழுவை நியமிப்பதில் கனம் ஆச்சாரியார் மேற்கொண்ட முறையையும், ஆந்திரகேசரி மேற்கொண்ட முறையையும் சீர்தூக்கிப் பார்ப்பவர்கள், ஆச்சாரியார் போக்கைச் சுண்ணாம்பிற்கும், ஆந்திரகேசரி போக்கை வெண்ணெய்க்குமே ஒப்பிடு மதிப்பர் என்பதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை. ஆச்சாரியாரின் நடவடிக்கை வெறும் ஏமாற்றம், கண்துடைப்பு வேலை என்றும் முடிவுக்கு வந்து தீருவர்.

## புதிய எஃகு தொழிற்சாலை

—o—

### இந்திய சர்க்கார் முடிவு

புதுடில்லி, பிப். 16—

ஒரிசாவில் 'ருர்கெல்லா' என்ற இடத்தில் ரூ 72 கோடி செலவில் புதிய எஃகு தொழிற்சாலையை நிர்மாணிக்க இந்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டதாக, மக்கள் சபையில் அறிவிக்கப்படும் எனத் தெரிகிறது.

## கைத்தறித் தொழில் அபிவிருத்திக்கு உதவி

புது டில்லி, பிப். 16—

கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காக இந்திய சர்க்கார் மேற்கொண்டு சுமார் 1,95,000 ரூபாய் வரையில் மே. வங்காளம், ஒரிசா, உத்தர பிரதேசம், சௌராஷ்டிரா, ஆஜ்மீர், மத்திய பாரத் ஆகிய மாநிலங்களுக்கு மானியமாகவும், கடனாகவும் அனுமதித்திருக்கிறார்கள்.

## அமெரிக்கக் காங்கிரஸ் நூல் நிலையத்திலிருப்பவை!

வாஷிங்டன், டி. ஸி, பிப். 16—

அமெரிக்க காங்கிரஸ் நூல் நிலையத்தால் சேகரிக்கப்பட்ட புத்தகங்கள், வெளியீடுகள், சினிமாப் படங்கள், இசைத்தட்டுகள், தஸ்தாவேஜுகள், பத்திரிகைகள் முதலியவற்றின் மொத்த எண்ணிக்கை 3,16,92,679 என சமீபத்தில் வெளியான ஆண்டு அறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

## மத்திய கிழக்கில் எண்ணெய் உற்பத்தி

லண்டன், பிப் 12—

சென்ற ஆண்டில் மத்தியக் கிழக்கில் எண்ணெய் உற்பத்தியின் அளவு 12,18,00,000 மெட்ரிக் டன்களாகும்.

குவைத்தில் 4,33,00,000 டன்களும், சவூதி அரேபியாவில் 4,14,00,000 டன்களும், இராக்கில் 2,83,00,000 டன்களும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

## தொழிலாளிகளுக்கே சொந்தமான பல் கம்பெனி

நியூயார்க், பிப். 14—

இங்குள்ள ஒரு பிரபல பல் கம்பெனியின் நிர்வாகத்தை ஊழியர்களே நடத்துகின்றனர். இந்த நிறுவனத்தில் 17 பங்கள் இருக்கின்றன; 35 பேர் வேலை செய்கின்றனர். இந்த நிறுவனத்தின் பங்குகளில் 49 சத விகிதம் ஏற்கனவே இவர்களிடம் இருந்தது; மீதியுள்ள 51 சதவிகிதத்தையும் இவர்கள் சமீபத்தில் வாங்கி விட்டனர்.

## 4,50,000 சுரங்கத் தொழிலாளர்கள்

—o—

### மார்ச் 1-ந் தேதி வேலை நிறுத்தம் செய்வர்?

கல்கத்தா, பிப். 17—

இப்போது நிலக்கரி விற்பனை விலையில் இந்திய சுரங்கங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அதிக வசதிகள் அளிப்பதென்பது சாத்தியமில்லை என்று கூறப்படுகிறது.

சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்துள்ளனர். சமரசம் ஏற்படாவிட்டால், மார்ச் மாதம் 1-ந் தேதி சுமார் 1,000 சுரங்கங்களிலுள்ள 4,50,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வர்.

## பாகிஸ்தான்—துருக்கி ஒப்பந்தம்

கராச்சி, பிப். 15—

பாகிஸ்தான்—துருக்கி ஒப்பந்தம் பூர்த்தியாகிவிட்டது என்றும், பாகிஸ்தான் மந்திரி சபை ஏழு மணி நேரம் கூடி யோசித்து சில மாறுதல்களைச் செய்து முடித்து விட்டதென்றும் தெரிகிறது. ஒப்பந்தம் அடுத்த 48-மணி நேரத்தில் அறிவிப்பு வராதென்று சிலர் கூறினர். 19-ந் தேதிக்கு முன் அறிவிப்பு இருக்காது என்று மற்றும் சில வட்டாரங்கள் கூறின.

## பாகிஸ்தானுக்கு ஆகாகான் எச்சரிக்கை!

கராச்சி, பிப். 16—

"பாகிஸ்தான் மாதர்கள் ஒற்றுமைப்பட்டு தங்கள் உரிமைகளுக்காகப் போராடவேண்டும்," என்று ஆகாகான் அகில பாகிஸ்தான் மாதர் சங்கத்திற்கு அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது.—

"பாகிஸ்தானிலுள்ள ஆண்கள், பெண்களுக்கு சம உரிமை கொடுப்பதற்கான அவசியத்தை உணர்ந்ததாகத் தெரியவில்லை; இதை உணர்ந்து நடக்காத வரையில், எல்லா நாடுகளும் முன்னேறும் போது, பாகிஸ்தான் மட்டும், பின்தங்கவேண்டியிருக்கும்."

## கள்ள தங்கம் கைப்பற்றப்பட்டது

கார்வார், பிப் 15—

இங்கிருந்து 72 மைல் தொலைவில் உள்ள கிர்வட்டி என்ற இடத்தில், ஒரு டாக்ஸியில், மூன்றரை லட்சம் மதிப்புள்ள 6 மணங்கு தங்கத்தை கோவாவிலிருந்து இந்தியாவுக்குக் கடத்திக் கொண்டுவரப்பட்டது; சுங்க அதிகாரி ஒரு ஜீப்பில் அந்த டாக்ஸியை துரத்திச் சென்று சோதனையிட்டு அத்தங்கத்தைக் கைப்பற்றினர்.

## செய்தி அலைகள்

★

### உலக ரப்பர் உற்பத்தி

லண்டன், பிப். 17—

சென்ற ஆண்டில், உலகில் 17,17,500 டன் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 15,65,000 டன் உபயோகிக்கப்பட்டுள்ளது.

• • •

### பாம்புக் கடிக்கு மருந்து— கண்டு பிடிக்க முயற்சி!

பம்பாய், பிப். 17—

பாம்புக் கடிக்கு சக்தி வாய்ந்த மருந்தைக் கண்டுபிடிப்பதற்காக பாஸ்சர் இன்ஸ்டிடியூட்டில் ஆராய்ச்சிகள் நடைபெறுகிறது.

* * *

### சினிமா ஆபரேட்டர்கள் தேவையில்லை!

லண்டன், பிப். 17—

சினிமா ஆபரேட்டர்களே இல்லாமல் இயந்திரங்களைக் கொண்டே சினிமாப் படங்களைப் போட்டுக் காட்டுவது, விளக்குகளை அணைத்து ஏற்றுவதெல்லாம் செய்ய முடியும் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

* * *

### சிகரெட்டுக்கும்—புற்றுநோய்க்கும் சம்பந்தமுண்டா?

லண்டன், பிப். 17—

சிகரெட் பிடிப்பதற்கும் புற்று நோய்க்கும் ஏதாவது சம்பந்தமுண்டா என்பதைப் பற்றி ஆராய்ச்சிகள் நடத்த மெடிகல் ரிஸர்ச் கௌன்சிலுக்கு பிரிட்டிஷ் புகையிலைத் தொழில் 2,50,000 பவுன் அளிக்குமாம்!

* * *

### இந்தியாவில் ரசாயனத் தொழில்-30 கோடி ரூபாய் மூலதனம்!

பம்பாய், பிப். 17—

இந்தியாவின் ரசாயனத் தொழில் யுத்தம் முடிந்தது முதற்கொண்டு அபிவிருத்தி யடைந்து வருவதுடன் நாட்டின் முக்கியமான 6 தொழில்களில் ஒன்றாக இருந்து வருகிறது. 1953-ல், ரசாயனத் தொழிலில் போடப்பட்ட மூலதனம் 30 கோடி ரூபாயாகும்!

* * *

### கைத்தொழில் வேலைகளுக்குக் கைதிகள்!

சில்சார், பிப். 14—

அஸ்ஸாமில் சிறை சீர்திருத்தத்திற்கு முதல்படியாக நீண்டகால தண்டனைபெற்ற கைதிகள் கைத்தொழில் வேலைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் கோபால்பூர் எனும் இடத்தில், இப்போது ஏற்படுத்தப்படும் சிறைக்குள்ளேயே கைதிகள் விவசாயத் தொழிலில் ஈடுபடவும் வசதிகள் உள்ளன.

* * *

### ஆஸ்திரேலியா அலறுகிறது!

மெல்போர்ன், பிப். 14—

பசிபிக்கில் உள்ள தீவுகளைக் குறித்த தேசப்படம் தயாரிக்க ஜப்பானிய நிபுணர்களை அமர்த்தும் அமெரிக்க யோசனையை ஆஸ்திரேலிய சர்க்கார் பலமாக ஆட்சேபித்துள்ளது. இந்தத் தயாரிப்பினால் கிடைக்கும் விவரங்களை கொண்டு, ஜப்பான், தன் மீது படையெடுக்கலாம் என்று ஆஸ்திரேலியா பயப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

இந்திய ரயில்வேக்களில், கெடுந்தூர பிரயாண மார்க்கத்திலுள்ள முக்கியமான நிலையங்களுக்கிடையில் 18 ஜனதா ரயில்கள் விடப்பட்டிருக்கின்றன; அவைகளில், தினசரி ஓடுகிற 14 ரயில்களும் வாரமொரு முறை ஓடுகிற 4 ரயில்களும இருக்கின்றன.

சென்ற ஆண்டு இறுதி வரையில் 34 விவசாய விஸ்தரிப்புப் பயிற்சி நிலையங்களில் கிராம ஊழியர்களும், மேற்பார்வையாளர்களும உட்பட மொத்தம் சுமார் 3,500 பேர் பயிற்சியைப் பூர்த்தி செய்திருக்கின்றனர்.

# பகுத்தறிவு இயக்கப் பணி பற்றி தோழர் எம். ஜி. ராமச்சந்திரன்

— (:) —

## கோவை அரசினர் கலைக் கல்லூரி நிகழ்ச்சி

கோவை அரசினர் கலைக் கல்லூரி மாணவர்கள் சார்பில், ஜன. 29, 30, 31 ஆகிய தேதிகளில், ஒய். எம். சி. ஏ. திடலில், முத்தமிழ் விழா நடைபெற்றது.

29—1—54 இயல் நாளன்று, தோழர் சி. தண்டபாணி தலைமை வகித்தார். "வாழ்க்கைப் பாதையில் வள்ளுவர்" என்பது பற்றி திருக்குறள் வி. முனுசாமி அவர்களும், 'இலக்கியக் குறிப்பு' என்பது பற்றி தோழர்கள் நெடுஞ்செழியன், என். எஸ். மாரிசாமியும் பேசினர்.

30—1—54 இசைநாள் நிகழ்ச்சிக்குப் புலவர் கா. சுந்தரராசனார் தலைமை வகித்தார். தோழர் க. அன்பழகன் 'தமிழிசை' என்பது பற்றி சொற்பொழிவாற்றினார். தோழியர் ஜெயலட்சுமி குழுவினர் இன்னிசை வழங்கினர். இரவு "விடிவெள்ளி" என்னும் நாடகம் நடைபெற்றது.

31—1—54 நாடக நாள் நிகழ்ச்சிக்குப் புலவர் சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். தோழர்கள் கே. எஸ். நடராசனார், 'நாடகத்தின் அவசியம்' பற்றியும், ஈ. வெ. கி. சம்பத் 'நாடக மறுமலர்ச்சி' பற்றியும் பேசினர். இரவு 7 மணிக்குத் தோழியர் கஸ்தூரி திலகம் அவர்கள் நடன விருந்தளித்தார்கள். இரவு 9 மணியளவில் 'கலப்படம்' எனும் நாடகம் நடைபெற்றது.

8—2—54 மாலை 4-30-க்கு கோவை அரசினர் கலைக் கல்லூரி தமிழ்ப் பேரவையின் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்திற்கு தோழர் ஆறுமுகனார் தலைமை தாங்கினார்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் "நாடக மறுமலர்ச்சி" எனும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார். அவர் பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"சம்பூர்ண ராமாயணம், சத்தியவான் சாவித்திரி போன்ற நாடகங்களை நடித்துக் கொண்டிருந்த மக்கள் இன்று சீர்திருத்தக் கருத்துக்களடங்கிய நாடகங்களை நடத்துகிறார்கள்; அந்த நாடகங்களை நடத்துகிறவர்களும் நடிகர்கள்தான் பழமைக் கருத்துக்கள் கொண்ட நாடகங்களை நடித்துக் கொண்டிருந்த நடிகர்கள் சீர்திருத்த நாடகங்களை நடிக்கக் காரணம், மக்கள் சீர்திருத்த எண்ணங் கொண்டோராக இருப்பதாலும் அவர்கள் சீர்திருத்தக் கதைகளை விரும்புவதனாலும்தான், சீர்திருத்த நாடகங்கள் நடத்தப்படுகின்றன என்று உறுதியிட்டுக் கூறுவேன்.

மக்கள், சீர்திருத்த எண்ணங் கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட தலைவர்களோ, இயக்கமோ காரணமாக இருக்கத்தான் வேண்டும். அந்த இயக்கம்தான் பகுத்தறிவு இயக்கம். பகுத்தறிவு இயக்கம் ஒன்றினால்தான் இன்று நாட்டில் புதிய எண்ணங்கள் பரவுகின்றன.

மாணவர்களாகிய நீங்கள், நினைத்ததைச் சாதிக்கும் ஆற்றல் படைத்திருக்கிறீர்கள். நாடக வளர்ச்சி, மாணவர்களாகிய உங்கள் கையில்தான் இருக்கிறது. கலை ஆர்வம், தமிழ் ஆர்வமும் கொண்ட மாணவர்களாகிய உங்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் புதிய கருத்திற்கு ஆதரவு தாருங்கள்; நாடகத் துறையில் நல்ல பணியினைச் செய்ய முயற்சியுங்கள்; அந்த முயற்சி எடுக்கின்றபொழுது, அது அன்பின் வழியதாயிருத்தல் வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

தோழர் சி. டி. தண்டபாணி நன்றி கூறினார்.

## அரையணாவுக்கு வைத்தியம்!

ஆமதாபாத், பிப். 15—

பம்பாய் சர்க்காரின் கிராம வைத்தியத் திட்டம் ஏப்ரல் முதல் அமுலுக்கு வந்தால் அரை அணாவுக்குப் பூர்வாங்க வைத்திய உதவி கிராமவாசிகளுக்குக் கிடைக்கும்.

இத்திட்டத்திற்கு ஆமதாபாத் ஜில்லாபோர்டு தமது கோட்டா பணத்தைத் தருவதற்கு தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

10 கிராமங்களுக்கு வைத்திய உதவி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கம். சமூக ஊழியர்களுக்கு ஒரு மாதத்திற்கு ஜில்லா ஆஸ்பத்திரிகளில் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்திற்கு கிராமப் பஞ்சாயத்துகளும், கிராமங்களும் பங்கு பணம் தர இசைந்துள்ளன.

## துறையூர் ஒட்டல் தொழிலாளர் சங்கம்

திருச்சி, பிப். 14—

6—2—54 துறையூர் ஒட்டல் தொழிலாளர் கூட்டம் தோழர் கே. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றபோது, ஒட்டல் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டு, தோழர்கள் வி. எம். சடையன், தலைவராகவும், டி. மருதை, செயலாளராகவும், மற்றும் துணைத் தலைவர், துணைச் செயலாளர், 11 பேர் கொண்ட கமிட்டி உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, திருச்சி மாவட்ட ஓட்டல் தொழிலாளர் சங்கத்துடன் இணைக்க நடப்பதென முடிவு செய்யப்பட்டது.

## முற்போக்கு இளைஞர் சங்கம்

திண்டுக்கல், பிப். 12—

தோழர் பி. முத்து அவர்கள் இல்லத்தில், தோழர் குப்புசாமி தலைமையில் முற்போக்கு இளைஞர் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் குல்முகமது, துரைராஜ் ஆகியோர் முற்போக்கு இளைஞர் சங்கம், படிப்பகம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் பற்றிப் பேசினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பொங்கல் விழா

சென்னை, பிப். 16—

14—2—54ல், குணை 17-வது வட்ட தி. மு. கழகச் சார்பில, தோழர் மா. சீனிவாசன் இல்லத்தில் தோழர் சு. பாலன் தலைமையில் பொங்கல் விழா நடைபெற்றது. தலைவர், மற்றுமுள்ள தோழர்கள் பேசியபின், தோழர் மா. சீனிவாசன் நன்றி கூறினார். பின்னர், தோழர்களுக்கு தேநீர் விருந்தளிக்கப்பட்டது. அத்துக்குடி நிதிக்கு ரூ 1 தரப்பட்டது. (சு. கி.)

## யாதவர் கல்லூரி மாணவர் சங்க சிறப்புக் கூட்டம்

மதுரை, பிப். 14—

7—2—54ல், இருளப்பர் இல்லத்தில், தோழர் கே. ஏ. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர் இ. ராம. இ. ரெங்கசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர் கே. ஏ. கிருஷ்ணன் தலைமை தாங்க, செயலாளர் வை. சுப்ரமணியன் ஆண்டறிக்கை வாசித்தார். தோழர்கள் எஸ். வீரராகவன், சுப. மூக்கன், வி. வேணுதாசன், எஸ். கிருஷ்ணன், எம். பொன்னையா, எம். முத்துராமலிங்கம், ஐ. இருளப்பன், வி. சுப்பிரமணியன், இ. ராம. இ. ரெங்கசாமி ஆகியோர் பேசினர்.

## ஆசிரியருக்குக் கடிதம்

### அரிசி எடுத்துவர தடையா?

ஆசிரியர்: 'நம் நாடு'
சென்னை.

ஐயா!

அரிசி போக்குவரத்துத் தடையை நீக்கிவிட்டதாகவும், ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்குத் தாராளமாக அரிசியை எடுத்துச் செல்லலாமென்றும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

குறிப்பாக, தஞ்சை, மதுரை, தென்னாற்காடு மாவட்டங்களிலிருந்து சென்னைக்கும், மற்ற மாவட்டங்களுக்கும் அனுமதியின்றி அரிசி எடுத்துச் செல்லலாமென நம்மாநில சர்க்கார் அறிக்கை விடுத்துள்ளதாகத் தினசரி செய்தித் தாள்களில் வெளியாகியுள்ளது; ரயில்வே நிலையங்கள் எல்லாவற்றிற்கும் உத்தரவு அனுப்பப்பட்டதாகவும் சர்க்கார் கூறுகின்றது.

தஞ்சை மாவட்டத்திலிருந்து சென்னைக்கு அரிசி வருவது குவிந்துள்ளதாக நிதி மந்திரி கூறுகின்றார்.

ஆனால், நான், தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து அரிசி கொண்டுவர எவ்வளவு முயற்சித்தும் பயனில்லை. ரயில்வே அதிகாரிகள் அனுமதி கேட்கின்றனர்; பத்திரிகைச் செய்தியை எடுத்துக் கூறினேன்; மறுக்கப்பட்டது — எங்கட்கு உத்தரவில்லை என்று கூறுகின்றனர். மந்திரிகள் கூறுகின்றனர்—தாக்கீது அனுப்பப்பட்டதென! இதில் எது உண்மை?

வியாபாரத்திற்காயினும் மறுக்கலாம்; மாவட்டம் விட்டு, மற்றொரு மாவட்டத்தில் தொழில் புரிபவர் நிலையென்னுவது? மற்றும், இந்தத் தாமதத்தால் மக்கட்குப் பணமும், நேரமும், வீண் செலவாகின்றது என்பதனை சர்க்கார் சிந்திக்க வேண்டாமா? இதுதானா மக்கள் சர்க்காரின் பண்பாடு? இம்மாதிரி தாமதத்தால் ஏற்படும் அவதிகள் அதிகம். ஆதலின் உடனடியாக ஆவன செய்ய சர்க்காரை வேண்டுகின்றேன்.

குமார. தணிகாசலம்,
காஞ்சீபுரம்.
12—2—54

## மலேயாவிலுள்ள இந்தியர்கள்

### பெரும்பாலானவர்களுக்கு ஓட் இல்லாமற் போகும்

கோலாலம்பூர், பிப். 15—

மலேயா பெடரேஷனின் முதல் பொதுத் தேர்தல், விசேஷக் கமிட்டியின் சிபார்சுகளின் படி நடைபெற்றால் பெரும்பாலான இந்தியர்களுக்கு ஓட் இல்லாமற் போகும் எனத் தெரிகிறது. மலேயாவில் 56,00,00 இந்தியர்கள் இப்போது இருக்கிறார்கள்.

கௌன்சிலிலுள்ள இந்தியர்களுக்கான தனி ஸ்தானங்களை எடுத்துவிட வேண்டும் என்றும், இந்தியர்கள் மலேயா சீனர்களுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டு ஸ்தானங்களைக் கைப்பற்ற வேண்டும் என்றும் இக் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

## கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் உதவி

சென்னை, பிப். 15—

மாநிலங்களின் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தானவுக்குக் கடன் உதவியை கைத்தறிகள் வாங்க அளிக்கப்பட வேண்டும் என்று இந்திய சர்க்காருக்கு அகில இந்திய கைத்தறி செசவு போர்டு சிபார்சு செய்துள்ளது.

இந்தக் கடன் உதவி கொடுக்கல் வாங்கல்களை மத்திய கூட்டுறவு பாங்கிகள் மூலம் நடத்தப்படலாம் என்றும், சிபார்சு செய்துள்ளது.

# விழுப்புரத்தில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை

—:-:—

## நகரசபை வரவேற்பு — திரு. வி. க. படத் திறப்பு

விழுப்புரம் நகரமன்றத் தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள் ஆகியவர்களால், 14—2—54 மாலை 5-30 மணிக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கட்கு நகரமன்ற சார்பில் வரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது.

வரவேற்புப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பதில் கூறினார்.

நகர மன்றத்தார் வேண்டுகோளின்படி—மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் படத்தையும் திறந்து வைத்து விரிவுரையாற்றினார். நன்றிகூறலோடு நிகழ்ச்சிகள் இனிது முடிவுற்றது.

## அல்லிநகரம் தி. மு. கழகம்

10—2—54ல், உறுப்பினர்கள் கூட்டம், தோழர் சை. முகமது இல்லத்தில், தோழர் க. முத்து தலைமையில் நடைபெற்றது, தோழர்கள் க. கோவிந்தசாமி செயலாளராகவும், மு. அளியா துணைச் செயலாளராகவும், பெ. மூர்த்தி பொருளாளராகவும், க. முத்து மாவட்டப் பிரதிநிதியாகவும், கா. பாசு, மு. ஆதிமூலம், அ. பொன்ராசு, கோ. கோவிந்தராசன், மா. முத்து, எஸ். எஸ். நாகூர், இ. காதர்சா, க. சுப்பையா, மு. ராசாமணி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## கொல்லைக்கோம்பை தி. மு. கழகம்

9—2—54 இரவு 7 மணிக்கு நிர்வாகக்குழு கூட்டம் தோழர் வெற்றிக்கையன் தலைமையில், தோழர் சுந்தரேசன் இல்லத்தில் நடைபெற்றது.

தோழர்கள் அடைக்கன், அரங்கசாமி இயக்க வளர்ச்சி குறித்துப் பேசினார். தோழர் வெற்றிக்கையன் அறிவுரை வழங்கினார். செயலாளர் இராமக்குட்டி நன்றி கூறினார்.

## பாரைப்பட்டி தி. மு. கழகம்

10—2—54 மாலை 7 மணியளவில், அண்ணா திடலில், தி. மு. கழகச் சார்பில், கொடியேற்று விழாவும், பொதுக் கூட்டமும் தோழர் மா. வங்கவேலன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மதுரை என். முத்து, என். ஏ. கமால், ஆத்தூர் ஆண்டவர், கா. சுப்பையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திண்டுக்கல் காமராசவின் குழுவினரால் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

## சுப்பிரமணியபுரம் தி. மு. கழகக் கிளை

அத்துக்குடி, பிப். 12—

7—2—54 இரவு 7 மணிக்கு தோழர் ஆத்திக்கன் தலைமையில் நடந்த உறுப்பினர் கூட்டத்தில், தோழர் கண்ணதாசன் குழுவினரின் தண்டனையைக் கண்டித்தும், அவ்வழக்கையும், அத்துக்குடி தோழர்கள் மீதுள்ள சதிவழக்கையும் வாபஸ் பெறுமாறு சர்க்காரைக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## செயற்கை அரிசி உற்பத்தி இயந்திரம்!

மைசூர், பிப். 16—

நாளொன்றுக்கு சுமார் 2 டன் செயற்கை அரிசி உற்பத்தி செய்யக்கூடிய புதிய இயந்திரம் ஒன்று இன்னும் இரண்டு மாதங்களில் மைசூரிலுள்ள மத்திய உணவு உற்பத்திமுறை ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்படுத்தப்படுமென்று தெரிகிறது.

## ரேணிகுண்டா பஞ்சாயத்து போர்டு

### உறுப்பினர் வேண்டுகோளுக்கு இணங்க இடைக்காலத் தடை

திருப்பதி, பிப். 14—

தாம் கைச்சின் வரி கட்டாததால், தன்னை பஞ்சாயத்துப் போர்டு மெம்பரல்லவென நிர்வாக அதிகாரி பிறப்பித்த உத்தரவு சட்டவிரோதமானது என்றும், கூட்ட நிகழ்ச்சிகளைத் தனக்கு அனுப்பாததும் சட்ட விரோதமென்றும், இந்த வழக்கு தீரும் வரை பஞ்சாயத்து போர்டுக் கூட்டம் கூட்டப்படக் கூடாதென்றும் கோரி ரேணிகுண்டா பஞ்சாயத்து போர்டு உறுப்பினர் பி. நரசிம்ம ரெட்டி திருப்பதி மாவட்ட முனிசிபல் கோர்ட்டில் ஒரு வழக்குத் தொடர்ந்துள்ளார்.

ஜில்லா முனிசிப், பஞ்சாயத்துப் போர்டுக்கு இடைக்காலத் தடைஉத்தரவை பிறப்பித்துள்ளார்.

## கசாப்புக் கடைக்காரர்— பஞ்சாயத்து போர்டு அதிகாரி சகிச் சண்டை

திருப்பதி, பி. 14—

கபில மடம் பஞ்சாயத்து எல்லையில் இறைச்சிக் கடை வைத்துள்ள ஜனுப் ஈ. கே. அப்துல் அஜீஸ் என்பவர் ரேணிகுண்டா பஞ்சாயத்துப் போர்டு நிர்வாக அதிகாரி எஸ். வி. செல்லபதி ராவ் மீதும், மற்றும் இருவர் மீதும் திருப்பதி சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஒரு வழக்குத் தொடுத்தார்.

அந்த வழக்கில், "அதிகாரி தம்மிடமிருந்து 'வீசை ரூ 2 வீதம் 6 வீசை கறி வாங்கியதாகவும், அட்வான்ஸ் ரூ 5 போக பாக்கி ரூ. 7 கொடுக்கும்படி கேட்டதாகவும். அதற்கு அவர் பணம் கொடுக்காமல் கறி விற்றதாகக் கூறி அட்வான்ஸ் ரூ. 5 திருப்பிக் கொடுக்காவிடில் அவர் மீது வழக்குத் தொடுக்கப்படுமென மிரட்டி கொடுத்த ரூ 5ம் வாங்கிக் கொண்டார்" என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மறுவை மாஜிஸ்திரேட் ஏற்றுக்கொண்டு மேற்படி அதிகாரியை கோர்ட்டுக்கு வரும்படி உத்தரவு பிறப்பித்துள்ளார். அந்த அதிகாரி மூன்று வாய்தாவாக கோர்ட்டுக்கு வரவில்லையென சொல்லப்படுகிறது.

## பாண்டுப் தி. மு. கழகம்

பம்பாய், பிப். 12—

4—2—54 மாலை 7-30 மணியளவுக்கு செயற்குழு கூட்டம் செயலாளர் கே. என். அப்பர் தலைமையில் நடைபெற்றது. பம்பாய் தி. மு. கழக முதல் மாநாட்டுப் பிரதிநிதிகளாக தோழர்கள் வி. தேவதாசன், ஆர். தாசன், எம் பாமலிங்கம், எம். ஈசாக்கு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் டி. என். நாராயணன் செயற் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## இறந்த பின்பும் உபயோகம்!

லட்சுமணபுரி, பிப். 14—

விவசாயத்திற்கு, மாடுகள் உயிருடன் இருக்கும்போது உழைப்பதுடன், இறந்த பின்னும் தன் உடலை உரமாகக் கொடுத்து உதவுகின்றன.

உத்தரப் பிரதேசத்தில் ஒவ்வொரு ஆண்டும் லட்சக் கணக்கான கால்நடைகள் வியாதி காரணத்தினாலும், முதுமையினாலும் மாண்டு போகின்றன. அவைகளின் எலும்பு, மாமிசம் முதலியவை மலிவான உரமாவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய உரம் தயாரிப்பு தொழிற்சாலை ஒன்று லக்னோவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

# 'எனக்கும் காமராசுக்கும் பிணக்கில்லை'

—(:)—

## 'நான் சொல்லுகிறேன் - நம்புங்கள்'

### கட்சிக்குள்ளாக தமக்கிருக்கும் எதிர்ப்பை மறைக்கும் ஆச்சாரியார் பூரட்டு !

திருச்சி, பிப். 15—

"காங்கிரஸ்காரர்கள் தைரியத்துடனிருக்க வேண்டும்; நம்மை ஓயாமல் குறை சொல்லிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வேலையே நம் எதிராளிகளுக்கு இல்லை."

"எதிராளிகள் செய்யும் ஆர்ப்பாட்டங்களைக் கண்டு மனக் கவலையோ, ஆத்திரமோ அடையக் கூடாது; இங்கு நீங்கள் இருப்பதிலிருந்தே உங்களுக்கு இருக்கவேண்டிய தைரியத்துடனிருப்பதாக நான் கருதுகிறேன்."

"35 ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் எவ்வளவு தீரத்துடனிருந்தீர்கள்? பயமென்பதையே நீங்கள் அறியாதவர்களாக இருந்தீர்கள்; உங்கள் அகராதியில் பயமென்ற பதமே இல்லாதிருந்தது; ஆனால், தற்போது நீங்கள் தீரமுள்ளவர்களாக காணப்பட்ட போதிலும் உண்மையில் தீரமுள்ளவர்களாக இல்லை,"

—இவ்வாறு சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார், வெண்ணெய் மலையில் நடைபெற்ற தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் சொன்னார்:—

"காமராசும், நானும் இங்கு இருக்கும்வரை, காங்கிரஸ்காரர்களுக்குள் எவ்விதப் பிளவும், ஒற்றுமைக் குறைவுமில்லாமல் காங்கிரஸ் வேலைகள் நடைபெற வேண்டுமென்ற ஒரே விருப்பந்தான் எங்களுக்குள் இருந்து வரும்; இதுதான் என் விருப்பமும் நம்பிக்கையுமாகும். இதைப் பற்றி மக்கள் மனதில் சந்தேகம் ஏதேனுமிருந்தால் அதைக் காங்கிரஸ்காரர்கள் போக்க வேண்டுமென நான் ஆலோசனை கூறுகிறேன். சிலர் உண்மை அடிப்படையை பெற்றிராத பல விஷயங்களை எழுதுகின்றனர்; சிலர் ஆத்திரமடைந்து அதனை மறுத்து எழுத ஆரம்பிக்கின்றனர்; ஆனால், காமராசும், நானும் அதை மறுத்துச் சொல்வதில் பிரயோசனமில்லை என்பதை உணர்ந்திருக்கிறோம்; இதனால் நாங்கள் சும்மா மௌனமாக இருந்து வருகிறோம்.

"கட்சியில் ஒற்றுமையைப் பாதுகாக்கும்படி காங்கிரஸ்காரர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நம்முள் பிளவு உண்டுபண்ணுவதில் மட்டும் சிரத்தை கொண்ட மக்கள் சிலர் இருக்கின்றனர். எவரேனும் தப்பபிப்பிராயத்துடன் இருந்தால் நாம் யாவரும் ஒன்றுபட்டிருக்கிறோம் என்பதை நீங்கள் அவர்களுக்குத் தெளிவாக காட்டிவிட வேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் தைரியத்துடனிருக்க வேண்டும்; நம்மை ஓயாமல் குறை சொல்லிக்கொண்டிருப்பதைத் தவிர வேறு வேலையே நம் எதிராளிகளுக்கு இல்லை.

"பாக்—அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்தை மறுக்க பயம் காரணமல்லவென்று டாக்டர் சுப்பராயன் விளக்கினார். நாம் அடுத்தபடி என்ன செய்வதென்பதையே ஆலோசிக்க வேண்டும். நமது மறுப்பை கவனியாமல், நாம் மறுக்கும் அந்தக் காரியம் நடப்பதாகத் தெரிந்தவுடன், நாம் அடுத்தபடி செய்யவேண்டிய காரியத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். அடுத்தபடியாக யுத்தம் ஒன்றும் வாராது. ஆனால், ஆசிய நாடுகள் அனுவசியமாக பாதுகாப்புச் செலவு செய்ய நேரிடும். அவசரத் தேவைகளுக்கு பணம் தேவையாக இருக்கையில், பாதுகாப்புச் செலவு அதிகரிப்பதைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டும். இதுபற்றித் தான் எனக்கு அதிகக் கவலை ஏற்படுகிறது," என்றார்.

மேலும் அவர் குறிப்பிட்டார்:—

"நீங்கள் காங்கிரசைப் பற்றி அனுவசியமாகக் கவலைப்பட வேண்டாம். நான் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மக்கள் காங்கிரசை ஆதரிப்பார்கள்; என் பேச்சைக் கேட்க பெருங்கூட்டம் கூடுவதாக சிலர் சொல்கிறார்கள்; ஆனால், மக்களுக்கு காங்கிரசில் நம்பிக்கை இருக்கிறது; அதனால்தான் அவர்கள் காங்கிரஸ் கூட்டத்திற்குத் திரண்டு வருகிறார்கள்; எல்லாம் நேர்மை, ஒழுக்கம், நாணயம் இவற்றைப் பொறுத்திருப்பதால். இந்த நற்குணங்களைக் கடைப்பிடித்து வரும்படி காங்கிரஸ்காரர்களை வேண்டிக்கொள்கிறேன்," என்றார்.

## டி. கே. சி. மறைவு

தென்காசி பிப் 16—

திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் சிறிது நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்து இன்று காலை குற்றாலத்திலுள்ள தமது இல்லத்தில், காலமானார். இவருக்கு வயது 73; இந்து அறநிலையக் குழுக் கமிஷனராக பதவி வகித்து ஓய்வு பெற்றவர்.

மாலை 5 மணிக்கு பிரேத ஊர்வலம் புறப்பட்டு மத்தளம்பாறை ரோடிலுள்ள அவருடைய சொந்த நிலத்திலேயே இறுதிச் சடங்கு நடந்தது. இந்த இறுதிச் சடங்கில் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## சென்னையில் ரஷ்யக் கலைஞர்கள்

சென்னை, பிப். 17—

சோவியத் ரஷ்யாவிலிருந்து வந்திருக்கும் கலைஞர் குழுவிற்கு தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில், நேற்று இரவு 9 மணிக்கு அடையாறு நெப்டியூன் ஸ்டுடியோவில் ஒரு வரவேற்பு நடைபெற்றது.

ரஷ்யக் கலைஞர்களுக்குப் பாராட்டு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. தென்னிந்திய நடிக, நடிகைகள் கலைஞர்களுக்கு தனித்தனியாக மாலைகள் அணிவித்தனர். பாராட்டுக்கும், வரவேற்புக்கும் ரஷ்யக் கலைஞர்கள் நன்றி தெரிவித்தபின் நடிகர் பாலசந்திரன் வீணைக் கச்சேரி நிகழ்த்தினார். லலிதா, பத்மினி, ராகினி ஆகியோரின் தில்லானா பாம்பாட்டி நடனங்களும், தஞ்சை சகோதரிகளின் குறவஞ்சி நடனமும் ரஷ்யக் கலைஞர்களை பெரு மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

மற்றும், என் என் ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி குழுவினரும், டி. கே. எஸ் சகோதரர்களும், டி. எஸ் பாலையா குழுவினரும், எஸ். வி. சகஸ்ரநாமம் குழுவினரும் தனித்தனியாக நாடகங்கள் நடித்துக் காட்டினர்.

விழாவிற்கு, தோழர்கள் எம். ஜி ராமச்சந்திரன், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ மதுரம், சிவாஜி-கணேசன் ஆகியோரும் மற்றும் பல முக்கிய நடிகர்களும் வந்திருந்தனர்.

சகஸ்ரநாமம் நன்றி கூறுதுடன் விழா இனிது முடிந்தது.

## கழகக் கூட்டம்

★

### ஒண்டிப்புதூர்

18—2—54 மாலை 6 மணிக்கு

இடம்:

ஸ்டேன்ஸ் காலனி மைதானம்

(கஸ்தூரி மில் அருகாமையில்)

பேசுபவர்:

என் எஸ். இளங்கோ

## டாக்டர் சி. நடேசனார் நினைவு நாள்

★

18—2—54 மாலை 6 மணிக்கு

இடம்: பார்த்தசாரதி நாயுடு தெரு சேப்பாக்கம், சென்னை

தலைவர்:

எஸ். ஜி. ரங்கராமானுஜம்

பேசுவோர்:

க. அன்பழகன்

என். வி. நடராசன்

கா. அப்பாதுரை

பி. ஆர். கோகுலகிருட்டிணன்

## தென்னார்காடு மாவட்ட கிளைக் கழகங்கட்கு

★

"மாவட்டக் கமிட்டியின் தீர்மானப்படி தூத்துக்குடி நிதிக்கு 33 கிளைக் கழகங்கள் தான் ரூ 10 வீதம் அனுப்பியுள்ளன. இன்னும் 65 கிளைக் கழகங்கள் அனுப்பிக்கவில்லை. எனவே, நானும், திட்டக்குடி மொன்னம்பலமும் கீழ் குறிப்பிட்டுள்ளபடி சுற்றுப் பயணம் செய்கிறோம். கிளைக் கழகங்கள் தீர்மானப்படி ரூ. 10-ம், ஆண்டு கட்டணம் ரூ 6-ம் சேர்த்து சேகரித்துத் தந்துவும்படி கேட்டுக்கொள்கிறேன்" என தென்னார்காடு மாவட்ட தி. மு. கழக செயலாளர் ஆர். பாலகுருசாமி அறிவிக்கிறார்.

சுற்றுப் பயணம்

பிப். 21: சிதம்பரம்

" 22, 23: நன்னைக்குறிச்சிவட்டம்

" 24: விருத்தாசல வட்டம்

" 25: சிதம்பர வட்டம்

" 26: செஞ்சி வட்டம்

## தொழிலாளருக்கு வீடு வசதி

ரூ 30 லட்சம் செலவில் திட்டம்

சென்னை, பிப். 16—

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இடவசதி அளிப்பதற்காக இந்திய சர்க்கார் திட்டத்தின்படி, செம்பியத்திலும், எருக்கஞ்சேரியிலும் ரூ 30 லட்சம் செலவில் 974 வீடுகள் கட்டும் திட்டம் செக்ரடேரியட்டில் நடைபெற்ற அதிகாரிகள் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

இத்திட்டம் இன்னும் இரண்டு வார காலத்திற்குள் அமுல் நடத்தப்படும். இத்திட்டம் வெற்றி பெற்றால், கோயமுத்தூருக்கும், மதுரைக்கும் இது பரவலாக்கப்படும்.

இத்திட்டத்தின் செலவுகளுக்கு இந்திய சர்க்கார் பாதி கடனாகவும், பாதி மானியமாகவும் வழங்கும்,

மாமத்தா இலாகா திட்டப்படி ஒரு வீட்டின் செலவு ரூ 2,040 ஆக இருக்கும்; காங்கிரீட் பலகை உபயோகித்தால் ஒரு வீட்டிற்கு ரூ. 1740 செலவாகும் என தெரிவிக்கப்பட்டது. பாதை, சாக்கடை மற்ற வசதிகளுக்கு ரூ 500 செலவாகும். பி. அண்டு ஸி. மில்லுக்குச் சொந்தமான அந்த நிலத்தின் கிரயம் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ 100 முதல் ரூ 140 ஆக இருக்கும்.

# தென்னார்காடு மாவட்டச் சார்பில் தூத்துக்குடி நிதி அளிப்பு

—(:)—

### விழுப்புரத்தில் பொதுக்கூட்டம் தலைவர்கள் பேச்சு

தென்னார்காடு மாவட்ட சார்பில் தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக்கூட்டமும், ஐவர் வரவேற்பு நிகழ்ச்சிகளும் 14-2-54 மாலை 7 மணிக்கு, விழுப்புரம் நகர் பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த மேடையில், தோழர் ஆர். பாலகுருசாமி தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் என். வி நடராசன், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., திரு. இளம்வழுதி-அட்வகேட், கே. ஏ மதியழகன், ஈ. வெ. கி. சம்பத், இரா நெடுஞ்செழியன், பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள் மும்முனைப் போராட்டங்களைக் குறித்தும், ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளை விளக்கியும், ஆச்சாரியார் புதுக் கல்வித் திட்டத்தினால் கிராம-நகர மக்களுக்கு விளையும் பெரும் தீங்குகளைப் பற்றியும் விரிவுரையாற்றினார்கள்.

தோழர் என் வி. நடராசன் தலைமையில், முக்கிய வீதிகளில் ஊர்வலமாக வந்து, தி மு கழகக் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டது. தென்னார்காடு மாவட்டக் கிளைக் கழகத் தோழர்கள் பெருந் திரளாக வந்து கலந்து கொண்டனர்; பல்லாயிரக்கணக்கான மக்கள் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். பல கிளைக் கழகங்கள் சார்பில், ஐவருக்கும் மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் வழங்கப்பட்டது.

தூத்துக்குடி வழக்கு நிதிக்கு தென்னார்காடு மாவட்டச் சார்பில் ரூ 750-ம், நகர தி. மு கழகச் சார்பில் ரூ 250-ம் கொடுப்பதாக பொதுச் செயலாளர் அவர்களிடம் உறுதியளித்திருந்தார்கள்

அதுபோல், தென்னார்காடு மாவட்டச் சார்பில் ரூ 750-க்கு ரூ. 600 மட்டுமே கொடுத்து, மீதி ரூ 150-ம் 3-4 தினங்களில், தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் மூலம் கொடுத்துவிடுவதாக தோழர் ஆர் பாலகுருசாமி வாக்குறுதியளித்து, பொதுக் கூட்டத்தில் ரூ 750-ம் கொடுத்திருப்பதாகவே அறிவிக்கப்பட்டது. (ரூ 150 பாக்கி வரவேண்டியிருக்கிறது.)

விழுப்புரம் நகர திமு கழகக் கிளைசெயலாளர் தோழர் உபசன் அவர்கள், ரூபாய் வசூலித்திருப்பதாகவும், மேடையில் பொதுச் செயலாளரிடம் கொடுக்கப்படும் என்றும் தோழர்களிடம் கூறியபடி, பொதுக் கூட்டம் இரவு 10 மணிக்கு முடிவுபெறும் வரையில் மேடைக்கு வராமலே இருந்துவிட்டதுமல்லாமல், நிதி அளிப்பு ரூ 250-யும் கொடுக்காமலே மறைந்து கொண்டார்.

தலைவர்கள் வழிச் செலவுக்கு 13—2—54-ல் தந்தி மணியார்டர் மூலம், வரும் செலவுக்கு அனுப்பி வைத்தார்; திரும்பிப் போகும் செலவுக்குக் கொடுத்து, வழி அனுப்பி வைக்கவும் முன் வராமலே போய்விட்டார்.

நிதி அளிப்புக்கு ரூபாய் கொடுக்க முடியவில்லை—வசூல் போதிய அளவு கிடைக்கவில்லை—என்றாவது, பொதுச்செயலாளரிடம் நிலைமையை விளக்கிக் கூறியிருக்கலாம்; ஒன்றுமே கூறாமல், அவர் மறைந்து கொண்டது வருந்தத்தக்கது — என்று பல தோழர்களும் வருத்தத்துடன் பேசிக் கொண்டார்கள்.

பொதுக் கூட்டத்தில் கீழ்க்கண்டவர்கள் உண்டியல் மூலம் (அண்டுகளில்) நிதிக்கு உதவும்படி கேட்டுக் கொண்டு வசூல் செய்த விபரம் வருமாறு:—

| | |
|---|---|
| தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., மூலம் | 81—3—10 |
| தோழர் இரா இளம்வழுதி, அட்வகேட் மூலம் | 32-12—0 |
| தோழர் பொன்னம்பலம் (திட்டக்குடி) மூலம் | 36-14—0 |
| தோழர் பொ. சொக்கலிங்கம் மூலம் | 31—7—1 |
| மணியக்காரர் வி கே. கிருஷ்ணசாமி மூலம் | 15—6—8 |
| ஆக மொத்தம் ரூ. | 197-11—2 |
| விழுப்புரம் கைத்தறி நெசவு தொழிலாளர்கள் | 7—0—0 |
| சிறுவல்லூர் தோழர் கே வேலாயுதம் | 5—0—0 |
| பண்ருட்டி தி. மு கழகக் கிளை மூலம் | 5—0—0 |
| வீரசோழபுரம் தி. மு. கழக கிளைதோழர்கள் | 7—0—0 |
| பெரும்பாக்கம் தி மு. கழகத் தோழர்கள் | 5—0—0 |
| ஐவரிடம் கையொப்பம் வாங்கிய வகையில் | 4—0—0 |
| விழுப்புரம் மருதூர் திருவள்ளுவர் கழகம் காலணா மாலை | 1-10—0 |
| தென்னார்காடு மாவட்டம் சார்பில் | 600—0—0 |
| ஆக மொத்தம் ரூ. | 832—5—2 |

இதில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர் ஈ. வெ. கி. சம்பத் ஆகியவர்கள் காரில் வந்த செலவுக்காக ரூ 60 கொடுக்கப்பட்டது நீக்கி ரூ. 772—5—2-ம் தூத்துக்குடி வழக்கு நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது.

தென்னார்காடு மாவட்டச் சார்பில் பாக்கி ரூ. 150-ம், விழுப்புரம் நகர தி. மு. கழகக் கிளை சார்பில் ரூ 250-ம், அனுப்பி வைக்கப்படும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

வரவு செலவு கணக்குகள் பிறகு வெளியிடப்படும்.

## திட்டமாம், திட்டம்!

புதுடெல்லி, பிப். 15—

அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ 7000 கோடி முதலீட்டுச் செலவிடும் வகையில் தயாரிக்கப்படுமென்று அதிகார பூர்வமாகத் தெரிகிறது.

இத்திட்டம் சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமென்று சொல்லப்படுகிறது.

## மறைவு

சென்னை, பிப். 17—

சென்னை சிந்தாதிரிப்பேட்டை திராவிட இயக்கத் தோழரும் 'நம் நாடு' பேக்கருமான தோழர் கே. பார்த்தசாரதி அவர்களின் தகப்பனார் எ. பி குப்புசாமி (1938 இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களில் குச்சி, சிலம்பு வித்தைகள் ஆடி மகிழ்வித்தவர்) ஆவடியில் 14—2—54-ல் உயிர் துறந்தார். என்பதை அறிந்து வருந்துவதுடன் அன்னார் குமாரர்கள் கே. வேணுகோபால், கே. பார்த்தசாரதி ஆகியோருக்கு புதுமை கலைமன்ற சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறோம்; நமது அனுதாபம் உரித்தாகுக. (ஆ—ர்)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.